**அக்டோபர்: 19**

## நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்தார்.

**வாசிக்க: லூக்கா 24:1-10**

வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல்புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக்கண்டு, உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல், அதை குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயப்பட்டுத் தலைகவிழ்ந்து தரையை நோக்கி: நிற்கையில், அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள். அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவுகூர்ந்து, கல்லறையை விட்டுத் திரும்பிப்போய், இந்தச் சங்கதிகளெல்லாவற்றையும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தார்கள்.
இவைகளை அப்போஸ்தலருக்குச் சொன்னவர்கள் மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், இவர்களுடனேகூட இருந்த மற்ற ஸ்திரீகளுமே.




இருண்டகாலம் முடிந்து ஒளிமயமான எதிர்காலத்திற்கு கடந்து வந்த நாள் தான் நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்த நாள். ஆனால் இந்த பாடுகளின் பாதை ஆண்டவரை தவிர, அவரோடு இருந்த ஒவ்வொருவருக்கும் மிக கடினமானதாக இருந்தது. ஆண்டவர் நம்மை நேசித்ததால் அதை செய்து முடித்தார். ஆனால் அவருடைய சீஷர்கள் அவரை நேசித்ததால் உள்ளம் உடைந்துபோனது. அவரை அவமான படுத்தியதையும், அகோரமாக அடித்து துன்புறுத்தியதையும், ஆணிகளால் கை கால்களை துளைத்ததையும் பார்த்த பொழுது, அவர்கள் அன்பு ஒருபுறம் உள்ளத்தை உடைத்தது, மறுபுறம் விசுவாசமெல்லாம் கரைந்தது. அவர் சொன்னதையெல்லாம் மறக்கபண்ணியது. அதனால் தான் தேவதூதரே வந்து சொன்னதை கூட நம்ப முடியவில்லை. இதில் அப்போஸ்தலருக்கு கிடைக்காத ஒரு பாக்கியம் அந்த மூன்று ஸ்திரீகளுக்கு கிடைத்தது. உயிர்த்தெழுந்த நற்செய்தியை உலகத்துக்கு சொல்லுகிற பாக்கியம். அவர்களின் விசுவாசம் கூட குன்றியிருந்தாலும், அவர்களின் அன்பு அதிகாலையில் அவர் சரீரத்தை பார்க்க ஓடவைத்தது. ஆகவே நம் விசுவாசம் குறைந்து போனாலும், அன்பு நம்மை நடத்தும். ஜெபிக்கலாமா. . . . ?

இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது. 1 கொரிந்தியர் 13:13

### ஜெபம்

மகிமையான பரலோக தந்தையே, எங்களுடைய அவிசுவாசத்தை எங்களுக்கு மன்னித்து, விசுவாசத்தில் வளரச்செய்யும். உம் அன்பினால் எங்களை நிரப்பும் என இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.



dailycoloringpages.com